# ஆய்வுச் சுருக்கம்

கல்வி நிறுவனமொன்றிலிருந்து மாணவர்கள் ஏன் விலகிச் செல்கிறார்கள் என்பதை தெளிவாக விளங்க முடியாதுள்ளது. எனினும் பாசாலையிலிருந்து விலகிச் செல்வதற்கு வேறுபட்ட காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றைக் குறிப்பாகக் கூறுவது சிரமமாகும்.இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகளை டின்டோ என்பவரது மாதிரியின் அடிப்படையில் ஆராய முனைகின்றது. கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து மாணவர் விலகிச் செல்வதென்பது தனியாள் ரீதியிலும்,நிறுவன ரீதியிலும் தோல்வியாகும் எனும் அடிப்படையில் மாணவர்கள் ஏன் விலகிச் செல்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து,அவற்றை இழிவளவாக்கி பாடசாலையில் தொடர்ச்சியாக தக்கவைப்பதற்கு பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வது இவ் ஆய்வின் சிறப்பம்சமாகும்.இவ் ஆய்வு கலப்பு முறையில் அமைந்த விவரண ஆய்வாக இருப்பதுடன், மாதிரிகளாக இடைவிலகிய மாணவர்கள், அதிபர்கள்,ஆசிரியர்கள், பெற்றார்கள் பயன்படுத்தப்பட்டு, வினாக்கொத்து நேர்காணல், ஆவணத்திரட்டல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.,இடைவிலகலில் மாணவரது கல்வி சார் இடர்பாடுகளுக்கு தனியாள்,குடும்பம்,பாடசாலை என்பன செல்வாக்கு செலுத்தியுள்ளது.அத்துடன் மாணவர்களில் காணப்படும் கல்வி சார் இலக்குகள் குறைவாகக் காணப்படுவதுடன்.தொழில்சார் இலக்குகளைத் தீர்மானிப்பதில் சமூக சூழ்நிலைக் காரணிகள் அதிகம் தாக்கம் செலுத்தியிருப்பதும் கண்டறியப்பட்டது.மேலும் பாடசாலை ரீதியில் காணப்படும் பண்பு சார் அம்சங்களில் சில காரணிகள் மாணவரைத் தக்கவைப்பதில் துணையாக இருக்கும் அதேவேளை சில காரணிகள் மாணவர்கள் விலகிச் செல்வதற்கு அடிப்படையாக இருந்துள்ளது.அத்துடன் பாடசாலையில் காணப்படும் சமூகவாழ்க்கையுடன் தொடர்பான பாடசாலை சமூகத்தினர்களுக்கு இடையிலான இடைத் தொடர்பும் குறைவாகக் காணப்படுவதும் கண்டறியப்பட்டது. கண்டறிதலின் போது பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் சாதக,பாதக தன்மைகளை இனங்கண்டு பாடசாலையானது மாணவர்களது இடைவிலகலைக் குறைத்து,தக்கவைத்தலுக்காக மேற்கொள்ளக் கூடிய பரிந்துறைகளையும் இவ் ஆய்வு முன்வைக்கின்றது.

# Abstract

The reasons for dropping out of students from an educational institution are unclear. Anyway there are many factors those influence the drop outs and it is difficult to state exactly. This research aims to find the factors those influence drop out based on "Tinto modal". The drop out of students from an institution is personally and institutionally a failure. Based on the concept, this research is specially designed to find out the reasons for dropping out in order to minimize the number of drop outs from school and to remedy to sustain them at school. At this juncture, this research is a descriptive research that used mixed method by using dropped out students, principal, teachers and parents as samples through collecting data by using questionnaires, interviews and documents and data was analyzed. The individual, family, and school have influenced the dropped out students' educational problems, the educational aims on students are very poor the work based on social context, some quality based factors have sustained the students and some have influenced dropping out more over the lack of social life in school and also the poor interaction between school community are the findings of this research. According to the findings of this research, by identifying the positive and negative factors and minimize the number of drop out in schools and also remedy to sustain them in school are too forwarded as recommendations .

Key Words; School drop outs, Tinto modal, Educational problems, Educational aims, School community, School factors.